# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 15564 / 2008 / எம்சி. 8 நாள் : 18.11.2008**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சிறப்புக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சிறப்புக் கூட்டம் வருகின்ற 24.11.2008 திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

18/11/08
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## நவம்வர் 2008 - மாமன்ற சிறப்புக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல்



| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் | |
| 1 | ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டம் - முன்னேற்ற விபரம் - விவாதித்து பதிவு செய்தல் - தொடர்பாக | 2 |



நன்றியுரை

## திருக்குறள்

**செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்**
**செல்வத்து ளெல்லாந் தலை.**

(குறள் -411)

## விளக்கம்

**செழுமையான கருத்துக்களைச் செவி வழியாகப் பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும்.**

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

**சிறப்புத் தீர்மானம் எண் 1**

தமிழகத்தில் பெரும்பாலும் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகிற அருந்ததியர் மக்களுக்கு தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் உள் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அம்மக்களைச் சார்ந்த சமூக அமைப்புகள் நீண்ட காலமாக போராடி வந்தன. அவர்களது கோரிக்கைக்கு செவிசாய்த்து கலைஞர் அரசு ஓய்வு பெற்ற நீதியரசர் ஜனார்த்தனம் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரையை ஏற்று தமிழக அரசு அருந்ததியர் மக்களுக்கு 3% உள் இடஒதுக்கீடு வழங்கியமைக்கு தமிழக அரசை வாழ்த்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென 35-வது மாமன்ற உறுப்பினர் திரு என். முருகேசன் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

**மா.ந.ம.தீர்மானம் எண் : 278 நாள் : 24.11.2008**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 1**

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்களான பில்லூர் இரண்டாவது தனிக்குடிநீர் திட்டம், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், நகர்ப்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு நிலை / ஒப்புதல் பெறப்படவுள்ள திட்டங்களான குடிநீர் பகிர்மான திட்டப் புனரமைப்பு மற்றும் 24 x 7 குடிநீர் விநியோகம், மழைநீர் வடிகால் கட்டுதல், நீர்நிலைகளை புனரமைத்து பாதுகாத்தல் மற்றும் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை திட்டம் போன்ற திட்டப் பணிகள் குறித்து மாமன்ற உறுப்பினர்களுக்கு திட்ட விளக்கம் அளித்து விவாதிக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மாமன்றப்பொருளுடன் இணைக்கப்பட்டுள்ள திட்டப்பணிகளின் முன்னேற்ற அறிக்கையினை மாமன்றம் விவாதித்து பதிவு செய்யலாம்.

ந.க.எண்: 8251/05/JN2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 279 நாள் : 24.11.2008**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்பட்டு வரும் பில்லூர் II–ம் குடிநீர் திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் குறித்தும், மேற்படி திட்டங்களில் உள்ள பணிகளின் சிப்பம் வாரியாக நாளது வரை மாநகராட்சியின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டு மாமன்றம் பதிவு செய்தது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டத்தில் இனிவரும் காலங்களில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள பணிகளான மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை சுத்தம் செய்து பராமரித்தல், சாலை போக்குவரத்து மேலாண்மை திட்டப்பணிகள், சாலையோர வடிகால் அமைக்கும் பணி, 24x7 குடிநீர் விநியோக திட்டப்பணி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் மூன்று இடங்களில் அமைக்கப்படவுள்ள அடுக்குமாடி வாகனம் நிறுத்தும் இடங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு, ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் மீது விளக்கம் அளிக்கப்பட்டதை மாமன்றம் பதிவு செய்தது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி